தொகுதி-6 எண் 2
Vol. 6 No. 2

*Chief Editor*
*Dr. M. Sadik Batcha*

*Advisory Editor*
*Dr. N. Chandra Segaran*

*Editorial Board*
*Dr. MAM. Rameez*
*Dr. R. Jeya Raman*
*Dr. M. Pandi*
*Dr. Aranga. Pari*
*Dr. A. Ra. Sivakumaran*
*Dr. A. Syed Zakir Hasan*
*Dr. Kumar*
*Dr. S. Easwaran*
*Dr. P. Jeyakrishnan*
*Dr. G. Veeramani*
*Dr. K. Narmatha*
*Dr. S. Balasubramanian*
*Dr. K. Vasudeyan*
*Dr. F. Selvakumaran*
*Dr. T. Vishnu Kumaran*
*Dr. S. Rajendran*
*Dr. B. Sathiyamoorthy*
*Dr. Govindaraj*
*Dr. Kumara Selva*
*Dr. Senthil Prakash*
*Dr. R. Kurinchiventhan*
*Dr. Sr. Jeusin Francis*
*Dr. R. Rajalakshmi*
*Dr. R. Malarvizhi Mangayarkarasi*
*Dr. P. Ibrahim*
*Dr. K. Sirajudeen*
*Mr. K. Saravanan*
*Dr. T. Jegathesan*

பங்குனி - ஆனி 2049
April - June 2018

ISSN : 2321 - 984X

பல்கலைக் கழக மானியக் குழு அங்கீகாரம் பெற்றத் தமிழ்ப் பன்னாட்டு ஆய்விதழ்
UGC APPROVED INTERNATIONAL THAMIZH JOURNAL

# நவீனத் தமிழாய்வு

*(பன்னாட்டுப் பன்முகத் [illegible] ஆய்விதழ்)*

# *Journal of* Modern Thamizh Research

*(A Quarterly International Multilateral Thamizh Journal)*

மறு அச்சு

***Published by***
**RAJA PUBLICATIONS**
10, (Upstair), Ibrahim Nagar, Khajamalai,
Tiruchirappalli - 620 023, Thamizh Nadu, India.
Mobile : +91-9600535241
website : rajapublications.com

16 பகுதி-2
Part -2

# UGC Journal Details

| | |
|---|---|
| **Name of the Journal :** | Journal of Modern Tamil |
| **ISSN Number :** | 2321984X |
| **e-ISSN Number :** | |
| **Source:** | UGC |
| **Subject:** | |
| **Publisher:** | Raja Publications, Tiruchirapalli |
| **Country of Publication:** | India |
| **Broad Subject Category:** | Arts & Humanities |

Print

| | | |
|---|---|---|
| 124. SENTHAMARAI, N. | MORPHOLOGICAL SEMANTIC PROCESSING IN TAMIL CHILDREN WITH HEARING AND HEARING IMPAIRMENT | 611-617 |
| 125 கிங்ஸி. ஜோ. | காலந்தோறும் - பழமொழிகள் | 618-620 |
| 126. நா. காணிக்கராஜ் | விழி.பா. இதயவேந்தன் சிறுகதைகளில் குடும்பம் | 621-626 |
| 127. S. BHARATHIRAJ | A STUDY ON PRE-HISTORIC SITES IN COIMBATORE DISTRICT, TAMILNADU | 627-632 |
| 128. R. SRINIVASAN | EMIGRATION IN KONGU REGION- A STUDY (1871-1881) | 633-638 |
| 129. செ. மெஜிலா ஜிவி | சங்க இலக்கியத்தில் தலைமை மற்றும் துணை வினைச் சொற்களின் பயன்பாடு | 639-641 |
| 130. மூ. சோபியா | யாழியின் கவிதைகளில் அஃறிணை தொன்மங்கள் | 642-647 |
| 131. அ. விமலாராணி | ஊடகவியலில் தமிழின் படிநிலை வளர்ச்சி | 648-652 |
| 132. வீ.தனலெட்சுமி | புதுக்கவிதை காட்டும் பொருளாதார உரிமைகளும் வர்க்கப் போராட்டமும் | 653-660 |
| 133. ஏ. பழனி | இஸ்லாமியச் சிறுகதைகள் உணர்த்தும் அறம் | 661-664 |
| 134. இர. ரேச்சல் மேனகா & ம. துர்காதேவி | விவிலிய மொழிபெயர்ப்பில் சொற்பட்டியல் | 665-668 |
| 135. இர. செந்தில்ராணி | கயிலாசநாதர் சதகத்தில் நிமித்தங்கள் | 669-671 |
| 136. S. RAJAGOPAL | WOMEN EMPOWERMENT WITH SPECIAL REFERENCE TO INDIAN AIR FORCE | 672-680 |
| 137. கு.நாகராஜன் | நா(ஆ)த்திக கண்ணதாசன் | 681-684 |
| 138. வே.சசிகலா | திலகவதியின் பத்தினிப்பெண் நாவலில் பெண்மை சித்தரிப்பு | 685-688 |
| 139. மு. செல்வி | சங்க இலக்கியங்களில் நல்லிசைப் புலவர்கள் | 689-694 |
| 140. L. BABY ALBERT | TRENDS IN AREA, PRODUCTION AND PRODUCTIVITY OF SELECT CROP IN TIRUVANNAMALAI DISTRICT-TAMIL NADU DURING THE PERIOD 2001-2013 | 695-701 |
| 141 கோ. வெங்கடேசன் | திருவள்ளூர் மாவட்ட மக்களின் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும் | 702-704 |
| 142. மி.ஜோஸ்பின் ரேணுகா | கவிதை - புலப்பாட்டுத்திறனும் அழகியலுணர்வும் | 705-707 |
| 143. ச. வாஞ்சிநாதன் | பாவேந்தர் கூறும் குடும்ப விளக்கில் மங்கையர் நிலை | 708-713 |
| 144. த. இரமேஷ்காந்தி | புறநானூற்றில் உளவியல் கூறுகள் | 714-718 |
| 145. சா. பூங்கொடி | அற இலக்கியங்கள் காட்டும் தனிமனித ஒழுக்கம் | 719-722 |
| 146. RAJESWARAN BOOPALAN | சிங்கப்பூர் மக்களின் தமிழ் மொழியில் மொழியியல் கூறுகள் | 723-727 |
| 147. பா. பனிமலர் | எம்.எஸ். உதயமூர்த்தியின் தொழில் முன்னேற்றச் சிந்தனைகள் | 728-730 |
| 148. ச. பாரதிபிரகாஷ் | ஆரிய திவ்விய தேச யாத்திரையின் சரித்திரமும் தமிழ்ப் பயண இலக்கியப் புனைவுமொழியும் | 731-735 |
| 149. போ. அனு | பாரதிதாசனின் அழகியல் சிந்தனை | 736-738 |
| 150. தே. டினேஷ் கோல்டு காபிரியேல் | தமிழ் தேசியம் - ஒரு பார்வை | 739-741 |
| 151. வீரா.முருகானந்தம் | ஜெயகாந்தனின் மனித நேயப் பார்வையும் பதிவும் | 742-745 |
| 152. மு.சசிக்குமார் | நாட்டுப்புற நிகழ்கலைகள் விளக்கம் | 746-749 |
| 153. K. LOKESWARI ALAN MARIA JOSE ASNA K SALIM | AN ANALYSIS OF MASS MEDIA EXPOSURE OF & FARMERS IN POLLACHI | 750-753 |
| 154. க. அய்யனார் | குழந்தைப் பாடல்களில் சமுதாயச் சிந்தனைகள் | 754-758 |
| 155. இரா. சதாசிவம் | திருக்குறளும் மெய்ப்பாட்டு உணர்வுகளும் | 759-762 |
| 156. பா. சங்கீதா | பட்டினப்பாலையில் திணை, துறையின் மேன்மை | 763-764 |
| 157. எம்.ஆர். தேவகி | பாரதியார் பாடல்களில் பெண் விடுதலை | 765-767 |
| 158. இ.ஆர். இரவிச்சந்திரன் | தொகை நூல்களில் முருகன் | 768-772 |
| 159. இரா. மலர்விழி | கவிஞர் சிற்பி கவிதைகளில் சமூகமும் பெண்கள் நிலையும் | 773-776 |
| 160. ப. இளமுருகன் | மதுரைக்காஞ்சியில் அரசியல் | 777-779 |
| 161. கர.நஸ்ரீன் பாத்திமா | நாகூர் ரூமியின் கவிதைகளில் பெண்ணியம் மற்றும் தலித்தியம் | 780-784 |
| 162. மு.சாதிக்பாட்சா | இன்குலாப் என்னும் எதிர்ச்சொல் "கலகக்காரர்" | 785-788 |
| 163. த.தமிழ்ச்செல்வன் | சவ்வாது மலைவாழ் மக்களின் வாழ்வியல் | 789-791 |
| 164. செ.பாலு | இலக்கியத்தில் கதையாடல் | 792-794 |
| 165. J. சங்கீதா | மூண்டிக்காரன் பண்ணையம் நாவலில் - விவசாயி | 795-796 |
| 166. அ.கல்பனாதேவி & க.பானுமதி | சங்க அகப்பாடல்களில் அஃறிணை | 797-800 |
| 167. ப. எழிலரசி | "வெ. இறையன்புவின் சாகாவரம் நாவல்" - ஆய்வு | 801-805 |

# சங்க அகப்பாடல்களில் அஃறிணை

**அ.கல்பனாதேவி**
பதிவு எண் : 12152, முனைவர் பட்ட முழுநேர ஆய்வாளர், ஏ.பி.சி.மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தமிழாய்வு மையம், தூத்துக்குடி, தமிழ்நாடு, இந்தியா.

**முனைவர் சு.பானுமதி**
நெறியாளர் & தமிழ்த்துறைத் தலைவர், ஏ.பி.சி.மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தமிழாய்வு மையம்,தூத்துக்குடி, தமிழ்நாடு, இந்தியா.
மனோண்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் அங்கீகாரம் பெற்ற கல்லூரி, அபிஷேகப்பட்டி திருநெல்வேலி, தமிழ்நாடு, இந்தியா.

## முன்னுரை

சங்க இலக்கியங்களில் அகப்பாடல்கள் தனிமனித உணர்வின் வெளிப்பாடாகவே அமைந்துள்ளன. காதல் கொண்ட தலைமகனும் தலைமகளும் தம் களவு வாழ்வின் அனுபவத்தை நம் மனதிற்குள்ளும் கொண்டு வந்து விடுகின்றனர். கற்பு வாழ்வின் சுவைதனை நம்மையும் சுவைக்க வைத்து விடுகின்றனர். காட்டிடைப் பயணப்பட்டு பொருள் தேடச் செல்லும் போதும் பொருள் கொண்டு திரும்பும் போதும் பயணிப்பது தலைவியின் உள்ளம் மட்டுமன்று; நமது நெஞ்சமும்தான். மாந்தரின் வாழ்வுதனை மாண்புடன் எடுத்தியம்பும் சங்க அகப்பாடல்களில் அஃறிணைகள் எத்துணை அளவிற்குத் தலைவன் தலைவியரது காதல் வாழ்விற்குத் துணை நிற்கின்றன என்பதனை பல பாடல்கள் நமக்குக் காட்டுகின்றன.

## அகப்பாடல்களில் அஃறிணைகள்

தலைவனது பண்புநலன் கூறுவதற்கும் தலைவியின் கற்புத்திறம் பற்றி எடுத்துரைப்பதற்கும் நாட்டுவளம் நவில்வதற்கும் வாழ்வு நெறிமுறைகளை நமக்குரைக்கும் பொழுதினிலும் அஃறிணைகளைச் சங்கப் புலவர்கள் தம் பாடல்களில் புனைந்து காட்டியுள்ளனர்.

## உள்ள உணர்வுகளுக்கு உறுதுணையாகும் அஃறிணைகள்

அக வாழ்வில் தலைமக்கள் சில இன்ப, துன்ப உணர்வுகளை வாய்விட்டுச் சொல்ல முடியாத நிலையில், தங்களுக்குப் பங்காகியவர்களிடம் கூட கூற இயலாது தவிப்பர். அவர்களுக்கு அவ்வுணர்வுகளைக் கொட்டுவதற்கு ஒரு வடிகால் தேவையாகின்றது. அச்சமயத்தில் உற்ற துணையாக அமைவது இயற்கை உள்ளிட்ட அஃறிணைகளே. தனக்குள் தானே பேசிக் கொள்வது போல் நெஞ்சம் உட்பட அஃறிணைகளான உயிர் உள்ளனவற்றோடும் உயிரற்றனவற்றோடும் பேசுவது இயல்பு. இதனை,

> "ஞாயிறு திங்கள் அறிவே நாணே
> கடலே கானல் விலங்கே மரனே
> புலம்புறு பொழுதே புள்ளே நெஞ்சே
> அவையல பிறவும் நுதலிய நெறியில்
> சொல்லுந போலவும் கேட்குந போலவும்
> சொல்லியாங்கு அமையும் என்மனார் புலவர்" (தொல்.செய். 192)

என்று கூறுவார் தொல்காப்பியர். ஞாயிறு முதலாக நெஞ்சம் ஈறாகக் கூறப்பட்டுள்ள பதினொன்றும் தலைவன் தலைவியரது துன்பத்திற்கு வடிகாலாக அமைகின்றன. தலைமகன் பெரும்பாலும் தன் நெஞ்சத்திடமே தன் உள்ளத்து உணர்வுகளைக் கூறுகின்றான். தலைவியோ, மேற்கூறிய அனைத்து அஃறிணைகளிடமும் தன் துன்ப உணர்வுகளைக்

கூறுகின்றாள். இவ்வாறு தலைமக்கள் அஃறிணைகளிடம் தன் உணர்வுகளைப் புலம்புவதை, 'காமம் மிக்க கழிபடர் கிளவி' என்று கூறுவர்.

உறுப்புடையதுபோல் , உணர்வுடையதுபோல், மறுத்துரைப்பதுபோல், நெஞ்சோடு புணர்த்துக் கூறுவனவும் சொல்லா மரபின் அவற்றோடு கெழீஇச் செய்யா மரபின் தொழிற்படுத்து அடக்கிக் கூறுவனவும் என அஃறிணைகளிடம் தலைமக்கள் பேசுவதனை தொல்காப்பியம் 1142 ஆம் நூற்பா கூறுகின்றது. இம்மரபினை,

"கேட்குந போலவும் கிளக்குந போலவும்
இயக்குந போலவும் இயற்றுந போலவும்
அஃறிணை மருங்கினும் அறையப் படுமே"
(நன்.சொல்.409)

என்று பவணந்தியார் கூறுகின்றார். இவை கேளாது, சொல்லாது என்று அறிந்திருந்தாலும் அவற்றை அழைத்து தம் உள்ள உணர்வுகளை அகமாந்தர்கள் வெளிப்படுத்துவதாகப் பாடுவது சங்கப் புலவர்களின் சிறப்பு.

**அஃறிணைகளை அழைப்பவர்**

அகப்பாடல்களில் தலைமக்கள் மட்டுமின்றி தோழி, செவிலி, நற்றாய், கண்டோர் ஆகியோரும், புறப்பாடல்களில் புலவர்களும் அஃறிணைகளை அழைத்துப் போசுகின்றனர்.

**அழைக்கப்படும் அஃறிணைகள்**

சங்க அகப்பாடல்களில் இயற்கையாகிய மேகம், நிலவு, ஞாயிறு, வாடை, கடல், பருவம், பொழுது போன்றன மாந்தர்களால் அழைக்கப்படுகின்றன. அஃறிணை உயிர்களில் குருகு, கூகை, கிளி, அன்றில், சேவல், காக்கை, தும்பி போன்ற விலங்குகளும் தெய்வம், நெஞ்சம், கூற்றுவன், கனவு, கழங்கு போன்றனவும் அழைத்துப் பேசுவதற்கு உரியனவாக உள்ளன.

"மைஇல் சுடரே" (கலி.142)

"நல்லை அல்லை நெடுவெண் நிலவே!" (குறு.47)

"ஓம்புமதி வாழியோ வாடை!" (குறு.235)

"ஓங்குவரை ஆறே!" (நற்.255)

"கையறு மாலை!" (ஐங்183)

"யார் அணங்குற்றனை கடலே!" (குறு.163)

என இயற்கையும் 'கொடியை வாழி தும்பி!' (நற்.277) செந்நெற்றிக் கணங்கொள் சேவல்' (குறு.107), 'மன்றுஇரு பெண்ணை மடல்சேர் அன்றில்!' (கலி.129), 'சிறுவெள்ளாங்குருகு' (நற்.70), 'செவ்வாய் பைங்கிளி!' (நற்.102), 'முல்லை வாழியோ முல்லை' (குறு.162) என விலங்குகளும் தாவரமும், 'வருந்தினை, வாழி என் நெஞ்சே!' (அகம்.79), 'ஒன்று தெரிந்து உரைத்திசின் நெஞ்சே!' (நற்.103) என்று நெஞ்சமும் தலைமக்களால் அழைத்துப் பேசுவதைச் சான்றாகக் கூறுலாம்.

அகப்பாடல்களில் நெஞ்சத்துடன் பேசுவதனை அதிகமான பாடல்களில் காணலாம். தலைமகனே அதிகமான இடங்களில் நெஞ்சுடன் தன் உணர்வுகளைப் பகிர்ந்து கொள்கின்றான். தலைவன், தலைவியைக் கண்டு கலந்து தான் பெற்ற இன்ப உணர்வினை எடுத்துரைத்து ஆறுதல் பெறும் உற்ற துணையாக தன் நெஞ்சையே அழைத்துப் பேசுகிறான். தலைவிக்கு இன்பமோ, துன்பமோ அருகிருந்து தோழி கலந்து கொள்வாள். அதனையும் மீறி தானுறும் துன்பங்களைத் தலைவி நெஞ்சிடம் கூறுகின்றாள். தலைவி நெஞ்சிடம் பேசும் இடங்களில் பெரும்பான்மையும் தலைவனின் காலம் தவறும் தன்மையுயைச் சுட்டுகிறாள்.

**ஊர்புனைவில் அஃறிணைகள்**

ஊரின் வளம் பாடும் புலவர்களும் அஃறிணைகளோடு கைகோர்த்துக் கொண்டு தம் புலைமயையே வெளிப்படுத்துகின்றனர். மருதத்திணைப் பாடல்களிலும் நெய்தல் திணைப் பாடல்களிலும் வரும் ஊர்புனைவுகளில் அஃறிணைகளின் ஆளுகையை அதிகம் காணலாம். அத்தகைய பாடல்களில் உள்ளுறையும் இறைச்சிப் பொருளும் அதிக இடம் பெற்றுள்ளன. அவற்றின் மூலம் தலைவனது பரத்தை ஒழுக்கம், மக்களின் வாழ்வியல், பறவை விலங்கு இவற்றின் அன்பு நெறி போன்றன சுட்டப்படுகின்றன.

### தலைவனின் ஒழுக்கம்

அகநானூற்றில் மருதநிலத் தலைவனை அழைக்கும் தோழி,

"பொய்கை நீர்நாய்ப் புலவுநாறு இரும்போத்து
வாளை நாள்இரை தேரும் ஊர!"
(அகம்.386:1-2)

என்று தலைவனது ஊர் வளத்தைக் கூறி அவளை அழைக்கிறாள். 'விடியற் காலையிலே புலால் நாறும் நீர்நாய் வாளை மீனை இரையாகத் தேடும், அத்தகைய ஊரை உடையவனே' என்பது அப்பாடல் வரிகளின் பொருள். ஆயினும் இங்கு தலைவியை தவிக்கவிட்டு பரத்தையை நாடிச் சென்று அலர் தூற்றும்படிச் செய்த பரத்தமை ஒழுக்கமுடைய தலைவன் விடியற் பொழுதிலே தலைவியை நாடி வருவதை சுட்டிக்காட்டப்படுவதை அறிய முடிகின்றது. அ∴றிணையான நீர்நாய், வாளை மீன் ஆகியன தலைவனின் பரத்தமை ஒழுக்கத்தைச் சுட்டுவதற்கு துணை நிற்கின்றன.

### விலங்குகளின் அன்புநெறி

இரவில் சந்திக்க வரும் தலைவனிடம் அவன் வரும் வழியில் ஏற்படும் இடர்களை எடுத்துக் கூறி அவ்வழியில் வந்து இரவுக்குறியில் சந்திப்பதை விடுத்து, விரைவில் மணம் முடித்துச் செல் என்று வலியுறுத்த நினைக்கும் தலைவி, அதனை அவனிடம் நேரில் கூற இயலாத நிலையில் ஒருநாள் தலைமகன் குறியிடத்தே வந்து இருக்க, அதை அறிந்து கொண்டு அவன் கேட்குமாறு அவனது வரவை அறியாதவள் போலத் தோழிக்குக் கூறுவது போல் தலைவி கூறியதாக அமைந்துள்ள அகநானூற்றுப் பாடலில் பன்றியைக் கொன்று இழுத்துச் செல்லும் ஆண்புலியின் செயலைக் கூறும் பெருங்குன்றூர் கிழார்,

"வாழை ஓங்கிய தாழ்கண் அசும்பில்
படுகருங் களிற்றின் வருத்தம் சொலிய,
பிடிபடி முறுக்கிய பெருமரப் பூசல்
விண்தோய் விடரகத்து இயம்பும்"
(அகம். 8: 9-12)

என்று யானையின் செயலைக் குறிப்பிடுகிறார். வாழை மரங்கள் ஓங்கிய இடமாகிய மலையில் உள்ள நீர் இல்லாக் குழியில் ஆண்யானை அகப்பட்டுக் கொள்ள, அ∴தறிந்த பெண்யானை ஆண்யானையை மேலே கொண்டுவரப் படிகள் அமைப்பதற்காக மரங்களை முறித்தது. பெண்யானையின் கூர்த்தமதி இங்கு புலப்படுவதோடு இரு யானைகளுக்கும் இடையேயான அன்பும் வெளிப்பட்டு நிற்கிறது.

### அ∴றிணை வழி வாழ்வியல்

நெல்லினை மேயும் கிழட்டுப் பகவினை பிடித்து பாகல் பகன்ற கொடிகளைக் கயிறாகக் கொண்டு காஞ்சி மரத்தில் கட்டி வைத்து கரும்பினைத் தீவனமாகக் காவலர்கள் கொடுக்கும் செய்தியினை,

"செழுஞ்செய் நெல்லின் சேய்அரிப் புனிற்றுக்கதிர்
மூதா தின்றல் அஞ்சி, காவலர்
பாகல் ஆய்கொடிப் பகன்றையொடு பரீஇ
காஞ்சியின் அகத்து, கரும்பு அருத்தி,
யாக்கும்" (அகம்.156: 3-6)

என்று பதிவு செய்துள்ளார் ஆவூர் மூலங்கிழார்.

பரத்தமை வாழ்வினை வெளிப்படுத்தும் ஊர்புனைவில் வாழ்விற்கு வழிகாட்டும், வாழ்வினை வழிப்படுத்தும் செய்திகள் மறைபொருளாக அமைந்தப் பாடல்கள் பல சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன.

"அம்பணத் தன்ன யாமை ஏறிச்
சேம்பின் அன்ன பார்ப்புப் பல துஞ்சும்
யாணர் ஊர" (ஐங்.43: 1-3)

எனும் இப்பாடலில் 'உருக்கி வார்த்த செம்பின் கட்டி போல ஆமைபார்ப்புகள் மரக்கால் போன்ற தாய் ஆமையின் மேல் ஏறி உறங்கும் என்று புனையப்பட்டுள்ளது. இவ்வியற்கைக் காட்சி வழித் தோழி, தலைவன் மார்பின் மீது அவன் புதல்வன் அமர்ந்து துயில் வேண்டிய இன்ப நிகழ்வுகளை அனுபவிக்காது விடுத்து பரத்தையரை நாடிச் சென்றாயே' எனத் தலைவனை கடிந்து கொள்ளும் போக்கைக் காண முடிகிறது.

### பறவைகளின் பாசம்

"வெண்தலைக் குறுகின் மென்பறை
விளிக்குரல்
நீள்வயல் நண்ணி இமிழும் ஊர!"

என்று நீண்ட வயல்களில் பிள்ளைக் குருகு தாயை விரும்பி அழைக்கும் குரல் ஒலிக்கும் என்பதனை ஊர்புனைவாகத் தருகிறார் புலவர். மேலும்,

"நீர்உறை கோழி நீலச் சேவல்
கூருகிர்ப் பேடை வயாஅம் ஊர"
(ஐங்.51:1-2)

என்றும்,

"பழனக் கம்புள் பயிர்ப்பெடை அகவும்
கழனி ஊர" (ஐங்.60: 1-2)

ஏன்றும் தன் பெடையினை நினைத்து நிற்கும் நீலச்சேவலையும் சம்பங்கோழியினையும் கூறுகின்றார் புலவர்.

### முடிவுரை

பகுத்தறிவுடைய மனிதனைப் பண்படுத்த ஐந்தறிவு விலங்குகளையும் பறவைகளையும் புலவர்கள் தங்களுக்குத் துணையாகக் கொண்டுள்ளனர். பத்துப்பாட்டு, எட்டுத்தொகை என்ற மேற்கணக்கு நூல்களில் அஃறிணைகளை அழகாகப் பயன்படுத்தி அமர இலக்கியங்களைப் படைத்துள்ளனர் சங்கப் புலவர்கள்.

ஞ